# வாக்குமூலம்

## கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

## வழக்கு எண். SC.No.9/2017

## வழக்கு சாட்சி: PW.16

## தேதி: 02.06.2023

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **அருள்ராஜ்** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **ராஜேந்திரன்** | **தொழில்:** | **விஏஓ** |
| **கிராமம்:** | **காரைக்குடி** | **சமயம்:** | **கிறிஸ்தவர்** |
| **தாலுகா:** | **காரைக்குடி** | **வயது:** | **33/2023** |

( 1, 3 எதிரிகள் ஆஜர், 2வது எதிரி ஆஜர் இல்லை, 2வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் காரைக்குடி வட்டம், கூத்தலூர் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.05.2015 அன்று நான் காரைக்குடி தாலுகா, இலுப்பக்குடி குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். 26.05.2015 அன்று காலை 08.00 மணியளவில் நானும் கிராம உதவியாளர் சரவணன் என்பவரும் எங்கள் அலுவலகத்தில் பணியிலிருந்த போது ராஜா என்ற பாரதிராஜா 21 வயது உள்ள நபர் எங்கள் அலுவலகத்தில் ஆஜராகி என் மீது குற்ற எண்.19/2015 என்ற எண்ணில் வழக்கு உள்ளது என்றும் என்னை போலீசார் தேடி வருகிறார்கள் என்றும் போலீசாரிடம் நான் பிடிபட்டால் என்னை அடிப்பார்கள் என்றும் அதனால் என் முன்பாக என்ன சம்பவம் நடந்தது என கூறினார். தனக்கும் வீரசோழன் என்பவருக்கும் கேஸ் கம்பெனியில் பணிபுரியும் போது பழக்கம் ஏற்பட்டது என்றும் நான் சுதர்சனம் கல்லூரியில் பி.பி.ஏ 3ம் ஆண்டு படித்து வருவதாகவும் என்னுடைய படிப்பு செலவிற்கு வீரசோழனிடம் சென்று வேலைக்கு சென்றதாகவும் மதுரையிலிருந்து கேஸ் சிலிண்டர்களை எடுத்து வந்து ஒவ்வொரு இடமாக சிலிண்டர்கள் சப்ளை செய்யும் போது நமனசமுத்திரத்தில் காவல் நிலையத்திற்கு எதிர்புறம் உள்ள அபிராமி ஸ்டோர் வசந்தி என்பவருக்கும் வீரசோழன் என்பவருக்கும் பழக்கம் ஏற்பட்டதாகவும் நானும் வீரசோழனுடன் சேர்ந்து அங்கு அடிக்கடி செல்வேன் என்றும் அப்போது வீரசோழனுக்கும் வசந்திக்கும் உறவு ஏற்பட்டது என்றும் தானும் வசந்தியுடன் அம்மா, அக்கா என்று பழகியதாகவும், வசந்தியின் மூத்த மகள் அன்புக்கரசியிடம் தனக்கு பழக்கம் ஏற்பட்டதாகவும்,

இவ்வாறு பழக்கங்கள் ஏற்பட்டு வந்த நிலையில் வசந்தியின் கணவர் கிருஷ்ண மூர்த்திக்கு இந்த விபரங்கள் தெரிய வந்தது என்றும் விபரம் தெரிந்த கிருஷ்ண மூர்த்தி தன்னுடைய மனைவி வசந்தியையும் மகள் அன்புக்கரசியையும் கண்டித்தார் என்றும் கிருஷ்ணமூர்த்தி தன்னுடைய கடை தேவைக்காக ஆம்னி கார் வைத்திருந்ததாகவும் அந்த ஆம்னி கார் மீது லாரியை மோதி கிருஷ்ணமூர்த்தியை கொலை செய்ய முயற்சி செய்ததாகவும் அந்த முயற்சி பலனளிக்கவில்லை என்றும் வீரசோழன் வசந்திக்கு ஒரு அழைபேசி வாங்கிக் கொடுத்தார் என்றும் 25.02.2015 அன்று வீரசோழன் வசந்தியிடம் உன் வீட்டுக்காரர் வந்தவுடன் ஒரு மிஸ்டு கால் கொடுத்தால் நாங்கள் அங்கு வந்துவிடுவோம் எனவும் கூறியுள்ளார். 25.02.2015 அன்று இரவு 10.30 மணியளவில் நமணசமுத்திரத்தில் உள்ள வசந்தியின் கடையின் எதிரே வீரசோழன் லாரியை நிறுத்தினார் என்றும் அப்போது பாரதிராஜா உடன் இருந்ததாகவும் அப்போது சொன்னது போல் வசந்தி மிஸ்டு கால் கொடுத்ததாகவும் வீரசோழனும் பாரதிராஜாவும் வசந்தியின் வீட்டிற்குள் சென்றதாகவும் வீட்டின் வெளியே வசந்தியும் அன்புக்கரசியும் நின்று கொண்டிருந்ததாகவும் வீட்டின் உள்ளே வீரசோழனும் பாரதிராஜாவும் சென்றவுடன் கிருஷ்ணமூர்த்தி எழுந்து என்னை கொல்ல வருகிறார்கள் என காப்பாற்றுங்கள் என அபிராமி, பவித்ரா ஆகியோர்களின் பெயரை சொல்லி சத்தம் போட்டார் என்றும் பாரதிராஜாவாகிய தான் கிருஷ்ணமூர்த்தியின் இரண்டு கைகளையும் கட்டியதாகவும் கிருஷ்ண மூர்த்தி தலையில் தலையணையை வைத்து வீரசோழன் அமுக்கியதாகவும் தாங்கள் கையோடு லாரியிலிருந்து எடுத்து சென்றிருந்த இரும்பு லிவரை கொண்டு கிருஷ்ணமூர்த்தி தலையில் வீரசோழன் அடித்தார் என்றும் ரத்த வெள்ளத்தில் கிருஷ்ணமூர்த்தி இறந்துவிட்டார் என்றும் கிருஷ்ணமூர்த்தி இறந்த தகவலை வீட்டின் வெளியே நின்று கொண்டிருந்த வசந்தி, அன்புக்கரசியிடம் வீரசோழனும் பாரதிராஜாவும் சொன்னார்கள் என்றும் வசந்தியும் அன்புக்கரசியும் தரையிலிருந்த ரத்தத்தை கழுவி சுத்தம் செய்தார்கள் என்றும் மர பெஞ்சில் கிருஷ்ணமூர்த்தியின் பிரேதத்தை வைத்து அருகிலிருந்த ரயில் பாதையில் போட்டுவிட்டு ரயில் அடித்து இறந்துவிட்டதாக சொல்லலாம் என திட்டம் போட்டார்கள் என்றும் பாரதிராஜா ஆகிய தான் நமனசமுத்திரத்திலிருந்து மதுரை செல்லும் வழியில் வேலிக் கருவையில் இரும்பு ராடை தூக்கி சென்றுவிட்டு சென்றோம் என்றும் பாரதிராஜாவை வீரசோழன் புதுக்கோட்டையில் இறக்கிவிட்டு சென்றுவிட்டார் என்றும் கிருஷ்ணமூர்த்தியின் கொலை சம்பவத்தை தாங்கள் தான் செய்தோம்

என்று பாரதிராஜா என்னிடத்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் நான் இந்த விபரத்தை என்னுடைய உயர் அதிகாரியான வருவாய் ஆய்வாளரிடம் தகவல் சொன்னேன். வருவாய் ஆய்வாளர் சம்பந்தப்பட்ட ரயில்வே காவல் ஆய்வாளரிடம் என்னை தகவல் சொல்ல சொன்னார். நான் தகவல் சொன்னேன். பின்னீடு 26.05.2015 அன்று நானும் கிராம உதவியாளரும் பாரதிராஜாவை ரயில்வே காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தோம். என்னிடத்தில் பாரதிராஜா கொடுத்த வாக்கு மூலத்தை ரயில்வே காவல் ஆய்வாளர் முன்பு பாரதிராஜா சொன்னார். அங்கு அந்த வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் தான் பாரதிராஜா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் ஆகும். அந்த வாக்குமூலம் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்பு சம்பவயிடத்திற்கு ஆய்வாளர், போலீசார், நானும் கிராம உதவியாளரும் பாரதிராஜாவை அழைத்து சென்றோம். அங்கு வைக்கப்பட்டிருந்த மர பெஞ்சை பாரதிராஜா அடையாளம் காட்டினார். என்னிடம் காட்டப்படும் மர பெஞ்சு தான் அந்த பெஞ்சு ஆகும். அந்த மர பெஞ்சு ஏற்கனவே அ.த.சா.பொ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அங்கு தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் நான் கையெழுத்து செய்தேன். அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. திருத்துறைப்பூண்டி நீதிமன்றத்தில் வீரசோழன் சரண்டர் ஆனவரை போலீசார் 02.06.2015 அன்று கஸ்டடி எடுத்து ரயில்வே காவல் நிலையத்தில் ஆய்வாளர் முன்பாக விசாரணை செய்தார்கள். எனக்கும் கிராம உதவியாளருக்கும் ஆய்வாளர் தகவல் சொன்னார்கள். அன்று மாலை 04.00 மணியளவில் நானும் கிராம உதவியாளரும் ரயில்வே காவல் நிலையத்தில் ஆஜரானோம். வீரசோழனிடம் போலீசார் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள். வீரசோழன் கொடுத்த வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் பதிவு செய்தார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் வீரசோழன் கொடுத்தது ஆகும். அந்த ஒப்புதல் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்று இரவு 07.00 மணியளவில் வீரசோழன் சம்பவத்திற்கு பயன்படுத்திய இரும்பு லீவரை நமணசமுத்திரத்திலிருந்து மதுரை செல்லும் பாதையில் 100 அடி தூரத்தில் கருவேல் செடியில் போட்டிருந்ததை காட்டினார். என்னிடம் காட்டப்படும் இரும்பு லீவர் தான் அதுவாகும். அந்த இரும்பு லீவர் **அ.த.சா.பொ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி தான் அந்த இரும்பு லீவர் கைப்பற்றியதற்கு உள்ளதாகும். அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் நானும் கிராம

உதவியாளரும் காவல் ஆய்வாளரும் கையெழுத்து செய்தோம். சம்பவயிடத்திலேயே நாங்கள் கையெழுத்து செய்தோம். பின்பு காவல் ஆய்வாளர் மேல் விசாரணை மேற்கொள்ள நாங்கள் திரும்பிவிட்டோம். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்க நான் நடந்த விபரங்கள் கூறினேன்.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் கடந்த 8 வருடங்களாக கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். கிராம நிர்வாக அலுவலர் பணி என்பது அரசு பணி என்றால் சரிதான். எனது பணி குறித்து உள்ள அரசாணைகளை நான் பின்பற்ற வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு பின்பற்றப்படாவிட்டால் என் மீது தகுதி நீக்கம் பணியிடை நீக்கம் செய்வார்கள் என்றால் சரிதான். எனக்கு பணி நேரம் இல்லை. 24 மணி நேரமும் தேவையின் பொருட்டு பணி செய்ய வேண்டும். பணி குறித்து எனது அன்றாட பணி குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். பணி குறிப்பேட்டை 15 நாட்களுக்கு ஒருமுறை என்ற முறையில் மாதம் இரு முறை வட்டாட்சியரிடம் சமர்பித்து கையெழுத்து பெற வேண்டும் என்றால் சரிதான். எனது கிராம அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதியை தாண்டி நான் வெளியே செல்லும் போது உயர் அதிகாரியிடம் எழுத்துப்பூர்வமாக நான் அனுமதி பெற வேண்டும் என்றால் வாய்மொழி தகவல் சொன்னால் போதுமானது. அரசு எங்களுக்கு கொடுக்கப்பட்ட அரசாணையில் எங்களுக்கு கொடுக்கப்பட்ட உத்தரவில் எழுத்துப்பூர்வமாக அனுமதி பெற வேண்டும் என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சூழ்நிலையின் அடிப்படையில் முதலில் வாய்மொழியாக தகவல் சொல்வோம், அதற்கு பின்னீடு எழுத்துப்பூர்வமாக அறிக்கை கொடுப்போம். 26.05.2015 அன்று 2வது எதிரி என் முன்பாக ஆஜரானது சம்பந்தமாக என்னுடைய அலுவலக நாட்குறிப்பேட்டில் நான் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. 1984ல் இருந்து 2004 வரை மட்டும் தான் பதிவு செய்ய வேண்டும் அதற்கு பின்னீடு உள்ள காலக்கட்டங்களில் அதுபோன்று நாட்குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லாததால் நான் பதிவு செய்யவில்லை. அதுபோன்று பதிவு செய்யப்பட வேண்டும் என்ற அரசாணை 2005ம் ஆண்டில் தான் வெளியிடப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 26.05.2015 அன்று காரைக்குடி ரயில்வே காவல் நிலையத்திற்கு செல்வதற்கு அவசர சூழ்நிலை காரணமாக மேலதிகாரிக்கு வாய்மொழியாக தகவல் சொன்னேன். எழுத்து மூலமாக அனுமதி பெறவில்லை. உண்மையில் 26.05.2015 அன்று 2வது எதிரி என் முன்பாக ஆஜராகியிருந்தால் அது சம்பந்தமாக எனது அலுவலக நாட்குறிப்பேட்டில் பதிவு

செய்திருப்பேன் என்றும் உயர் அதிகாரிகளிடமும் அனுமதி பெற்றிருப்பேன் என்றும் அதுபோல் இல்லாததால் 2வது எதிரி என் முன்பாக ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. 2வது எதிரி என் முன்பாக எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் தரவில்லை என்றும் அதுபோல் கொடுத்திருந்தால் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசாரிடமும் நீதிமன்றத்திடமும் நான் சமர்பித்திருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல. 2வது எதிரியிடமிடருந்து எவ்வித சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல் அதிகாரிகள் கேட்டுக கொண்டதற்கிணங்க பூர்த்தி செய்யப்படாத வெற்று பேப்பரில் நான் கையெழுத்து செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. 02.06.2015ம் தேதி காரைக்குடி ரயில்வே காவல் நிலையத்திற்கு காவல் ஆய்வாளர் களஞ்சியம் என்னை எனது தொலைபேசி 9600538050 க்கு அழைத்தார். காவல் ஆய்வாளர் அவருடைய அரசாங்க தொலைபேசியிலிருந்து 83000... அழைத்தார் அதன் தொடர்ச்சியான நம்பர் எனக்கு ஞாபகமில்லை. 02.06.2015 அன்று காரைக்குடி ரயில்வே காவல் நிலையத்திற்கு நான் சென்ற விபரத்தை எனது அலுவலக நாட்குறிப்பேட்டில் பதிவு செய்தேனா என்றால் பதிவு செய்யவில்லை நானும் மற்றவர்களும் அந்த அரசாங்க நடைமுறையை தீர்மானத்திற்கு பின்பு 2015லிருந்து பின்பற்றவில்லை. 02.06.2015 அன்று காரைக்குடி ரயில்வே காவல் நிலையத்திற்கு நான் செல்வதற்கு என்னுடைய உயர் அதிகாரிகளிடம் நான் முறையான அனுமதி கடிதம் பெறவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் 02.06.2015 அன்று 1வது எதிரி என் முன்பாக காவல் அதிகாரிகளிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் அதில் நான் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் முன்பாக எந்த சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சான்று பொருட்கள் கைப்பற்றியதாக சொல்லப்படும் மகஜரில் நான் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரி கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தாரா என்றால் கையொப்பம் செய்தார். போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் 5, 6 வெற்றுப் பேப்பரில் கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றும் அதில் போலீசார் நிரப்பிக் கொண்டதற்கு ஏதுவாக நீதிமன்றத்தில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் 05.02.2014 அன்று கிராம நிர்வாக அலுவலராக பணியில் சேர்ந்தேன். எனது கிராம நிர்வாக அலுவலகத்திற்கும் காரைக்குடி ரயில்வே காவல்

நிலையத்திற்கும் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும். எனது அதிகாரம் வரம்பிற்குட்பட்ட காவல் நிலையத்திலிருந்து வழக்கு சம்பந்தமாக அழைப்பு கொடுத்தால் நான் செல்வது வழக்கம். 2வது எதிரி பாரதிராஜா 26.05.2015 தேதிக்கு முன்பு எனது கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வந்துள்ளாரா என்றால் இல்லை. நான் அன்றைய சமயத்தில் இலுப்பக்குடியில் தான் குடியிருந்து வந்தேன். நான் பொதுவாக எனது அலுவலகத்திற்கும் சம்பவயிடத்திற்கும் உத்தரவின் பேரில் அவசர பணி நேரத்திற்கும் நான் வருவதுண்டு. 2வது எதிரி நான் எனது அலுவலகத்திற்கு வந்த பின்னீடு தான் வந்தார். அப்போது நானும் கிராம உதவியாளர் மட்டும் தான் இருந்தோம். 2வது எதிரி எனது அலுவலகத்திற்கு வரும் போது நேரம் காலை 08.00 முதல் 09.00 இருக்கும். அலுவலகத்திற்குள் 2வது எதிரி மட்டும் தான் வந்தார். 2வது எதிரி எனது அலுவலகத்திற்கு வாகனத்தில் வந்தாரா அல்லது நடந்து வந்தாரா என்றால் அவர் எப்படி வந்தார் என்று எனக்கு தெரியாது. 2வது எதிரி எனது அலுவலகத்தில் 45 நிமிடம் முதல் ஒரு மணி நேரம் வரை இருந்தார். அப்போது பொது மக்கள் யாரும் எனது அலுவலகத்திற்கு வரவில்லை. 2வது எதிரி என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தை சாதாரணமாக பதிவு செய்து அதை காவல் ஆய்வாளரிடம் கொடுத்து முழுமையாக வாக்குமூலத்தை பதிவு செய்தோம். என்னிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 2வது எதிரியே கைப்பட எழுதினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 2வது எதிரி கையொப்பம் செய்தார் அதில் நானும் எனது உதவியாளரும் கையொப்பம் செய்தோம். 2வது எதிரி தனது வாக்குமூலத்தில் பிரேதத்தை ரயில்வே தண்டவாளத்தில் வைத்ததாக கூறியதால் 2வது எதிரியை ரயில்வே காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றேன். 2வது எதிரியை எனது இரு சக்கர வாகனத்தில் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றேன். கிராம உதவியாளர் தனியாக அவரது இரு சக்கர வாகனத்தில் வந்தார். மதியம் சுமார் 12.30 மணியளவில் ரயில்வே காவல் நிலையம் சென்றோம். அங்கு அரை மணிநேரத்திற்கும் மேலே இருந்தோம். 2வது எதிரி தனது ஒப்புதல் வாக்கு மூலத்தை இரண்டு பக்கத்தில் எழுதிக் கொடுத்தார். அதில் இரண்டு பக்கங்களிலும் 2வது எதிரி கையெழுத்து செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கடைசி பக்கத்தில் மட்டும் நானும் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். போலீசார் 2வது எதிரியை விசாரிக்கும் போது காவல் ஆய்வாளர், இரண்டு போலீசார், நான் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோர் இருந்தோம். காவல் நிலையத்தில் 2வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 2 பக்கங்கள் மட்டும் தட்டச்சு

செய்திருந்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 2வது எதிரி பாரதிராஜா ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்து செய்தார். நான் அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் கடைசி பக்கத்தில் மட்டும் கையெழுத்து செய்தேன். அதன் பின்னீடு மதியம் சுமார் 02.30 மணியளவில் 3வது எதிரியின் வீட்டிற்கு சென்றோம். சம்பவயிடத்தில் 3வது எதிரிக்கு ஒரு கடை, ஒரு வீடு, ஒரு செட் இருந்தது. 3வது எதிரியின் கடையின் வாசல் எந்த திசையில் இருந்தது என்றும் வீட்டின் வாசல் எந்த திசையில் இருந்தது என்ற விபரமும் எனக்கு தெரியாது. வீட்டில் எத்தனை அறைகள் இருந்தது என்ற விபரமும் எனக்கு தெரியாது. போலீசார் கைப்பற்றிய மர பெஞ்சு ஓட்டு செட்டிலிருந்தது. நான் சென்று பார்க்கும் போது அந்த மர பெஞ்சில் ரத்தக் கறை இருந்ததா என்றால் ரத்தக் கறை எதுவும் இல்லை. 3வது எதிரியின் வீட்டிற்கு எதிரே உள்ள நமனசமுத்திரம் காவல் நிலையம் எந்த திசையில் உள்ளது என்று எனக்கு தெரியாது. நான் சம்பவயிடத்திற்கு சென்ற சமயம் 3வது எதிரி மற்றும் அவரது மகள்களான அபிராமி, பவித்ரா ஆகியோர் இருந்தார்கள். போலீசார் அவர்களிடம் விசாரணை செய்தார்கள். அங்கு இரண்டு மணி நேரம் இருந்தோம். காரைக்குடி ரயில்வே காவல் நிலையத்திலிருந்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீட்டிற்கு காவல் ஆய்வாளரின் ஜீப்பில் சுமார் 5 மற்றும் 6 நபர்கள் சென்றோம். அதன் பிறகு காவல் ஆய்வாளர் மற்றும் நாங்கள் சுமார் 05.00 மணிக்கு கிளம்பிவிட்டோம். நான் இந்த வழக்கு சம்பந்தமாக சுமார் 5, 6 கையெழுத்துகள் செய்திருப்பேன். ஆனால் இரண்டு ஒப்புதல் வாக்குமூலங்களில் இரண்டு கையெழுத்து போட்டுள்ளேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை 4, 5 முறை விசாரணை செய்தார்கள். என்னை காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரித்தார்கள். என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் 2வது எதிரி கொடுத்த சமயத்தில் அவர் என்ன உடை அணிந்திருந்தார் என்றால் ஊதா கலர் கட்டம் போட்ட சட்டையும், கைலியும் அணிந்திருந்தார். அதன் பிறகு நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் 2வது எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் அதன் பேரில் இந்த மர பெஞ்சு கைப்பற்றப்படவில்லை என்றும் இந்த வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்களில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றும் நான் சொன்னது போல் 2வது எதிரி எந்த ஒப்புதல் வாக்கு மூலமும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 2வது எதிரி கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை. நான் அரசு ஊழியர் என்பதால்

போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் கையெழுத்து செய்த இடங்களில் அலுவலக முத்திரை இல்லை. ஆனால் பதவி எழுதியுள்ளேன். நான் கையெழுத்து செய்த பேப்பர் அனைத்தையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட பேப்பரில் சம்பவயிடத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். நான் கையெழுத்து செய்த எந்த பேப்பரிலும் அடித்தல் திருத்தல் இல்லை என்றால் சரிதான். நாங்கள் 3வது எதிரியின் வீட்டிற்கு செல்லும் போது அங்கிருந்த கடை திறந்திருக்கப்படவில்லை. நாங்கள் சென்ற சமயத்தில் நமணசமுத்திரம் காவல் நிலையம் எதிரில் மக்கள் நடமாட்டம் இருந்தது என்றால் இருந்தது. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் நான் எந்த கையொப்பமும் இடவில்லை என்றும் போலீசார் எதிரிகளுக்கு எதிராக தயார் செய்திருந்த பேப்பர்களில் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.